பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 12 2025** **12 40**

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்

**1.** முப்படை வீரர்களின் தியாகத்தைப் போற்றும் கொடிநாளை ஒட்டி திரட்டப்படும் நிதிக்கு பொதுமக்கள் தாராளமாக வழங்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.** கோவாவில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு பிரதமர் நிவாரண நிதியில் இருந்து தலா **2** லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

**3.** இண்டிகோ விமான சேவை பாதிக்கப்பட்டது குறித்து **24** மணி நேரத்தில் பதிலளிக்குமாறு அந்நிறுவன அதிகாரிகளுக்கு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

**4.** நேபாளத்தில் **5** லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பணப் பரிவர்த்தனைகளை வங்கி மூலமாக மேற்கொள்ள வேண்டும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

**5.** இந்திய - தென்னாப்பரிக்க ஹாக்கி அணிகளுக்கு இடையிலான **3** போட்டிகள் கொண்ட தொடர் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

முப்படை வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் கொடிநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர், பாதுகாப்புத்துறை அமைச்சர் உள்ளிட்டோர் நாட்டுக்காக தியாகம் செய்த வீரர்களுக்கு தமது வீர வணக்கத்தை செலுத்தியுள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், உறுதியான தைரியத்துடன் நாட்டுக்காக தமது இன்னுயிரை தியாகம் செய்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை இந்நாளில் வணங்குவதாக தெரிவித்துள்ளார்.

ராணுவ ஒழுக்கத்துடன் மக்களைக் காக்க வேண்டும் என்ற சிந்தனையோடு போராடி நாட்டை வலுப்பெறச் செய்த வீரர்களை இந்நாளில் நினைவுகூறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வீரர்களின் ஒழுக்கமும், தியாகமும் அவர்களது கடமை உணர்ச்சிக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது என்று கூறியுள்ள பிரதமர், கொடிநாள் நிதிக்கு மக்கள் தாராளமாக வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

முப்படையினரின் கொடிநாளை ஒட்டி இந்திய வீரர்களின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், முப்படை வீரர்களின் தன்னலமற்ற சேவையால் நாடும், நாட்டு மக்களும் பாதுகாக்கப்படுவதாக கூறியுள்ளார்.

அவர்களின் சேவையும், தியாகமும் ஈடு செய்ய முடியாதது என்று கூறியுள்ளார்.

கொடிநாள் நிதிக்கு பொதுமக்கள் மனமுவந்து தாராளமாக நிதியளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டு மக்கள் அளிக்கும் கொடிநாள் நிதி வீரர்களின் அற்பணிப்பை கௌரவிப்பதாகவும், மேலும் அவர்கள் வலிமையோடு செயல்பட உதவிடும் என்றும் கூறியுள்ளார்.

கொடிநாளையொட்டி முப்படைகளில் பணியாற்றி வரும் அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு எப்போரும் தயார் நிலையில் இருக்கும் வீரர்களின் ஒப்பற்ற சேவையைப் பாராட்டுவதாக கூறியுள்ளார்.

தளராத உறுதிப்பாட்டுடனும், வீரத்துடனும் போராடி இன்னுயிரையும் தியாகம் செய்த வீரர்கள், கடற்படை மாலுமிகள்

மற்றும் விமானப்படை வீரர்கள் உள்ளிட்டோரை இந்நாளில் அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

<<<<>>>>

வடக்கு கோவாவில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில், தீ விபத்தில் தங்களது குடும்ப உறுப்பினர்களை இழந்து வாடும் உறவினர்கள் இந்த இக்கட்டான தருணத்திலும் நம்பிக்கையோடு செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த தீ விபத்து தமக்கு மிகுந்த வருத்தத்தை அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

தீ விபத்தில் உயிரிழந்தோரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வதாகவும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமது ஆறுதலைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

காயமடைந்தோர் விரைந்து நலம் பெற இறைவனிடம் வேண்டுவதாகவும் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், இந்த சம்பவம் தமக்கு ஆழ்ந்த துரயத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள பிரதமர், காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற வேண்டும் என்று கூறியுள்ளார்.

கோவா முதலமைச்சர் டாக்டர் பிரமோத் சாவந்தை தொடர்புகொண்டு பிரதமர் நிலைமையைக் கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்டோருக்கு தேவையான உதவிகள் செய்து தரப்படுவதாக கோவா முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி.

நட்டா உள்ளிட்டோரும் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில் பாதிக்கப்பட்டோருக்கு தேவையான உதவி மற்றும் நிவாரண நடவடிக்கைகளை கோவா அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள பதிவில், துயர சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விபத்தில் உயிரிழந்தோரை இழந்து வாடுவோருக்கு மன தைரியத்தையும், வலிமையையும் தர இறைவனிடம் பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

இதனிடையே கோவா தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25ஆக உயர்ந்துள்ளது.

<<<<>>>>

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் அகமதாபாதில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

வீட்டு வசதி, உள்கட்டமைப்பு, பொது சுகாதார வசதி உள்ளிட்ட திட்டங்களை திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்க உள்ளார்.

முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேலும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

இண்டிகோ விமான சேவை பாதிக்கப்பட்டது குறித்து அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. பீட்டர் எல்பார்ஸ் மற்றும் மேலாளர் திரு. Isidro ஆகியோர் 24 மணி நேரத்திற்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள நோட்டீசில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் பெருமளவு இன்னலுக்கு உள்ளாகி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் மாற்று ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளாததற்கான காரணத்தையும் வினவியுள்ளது.

முறையான திட்டமிடல் இல்லாத காரணத்தால்தான் பெரிய அளவில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் கூறியுள்ளது.

விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதை அடுத்து, ரயில்வே நிர்வாகம் நாடு முழுவதும் 89 சிறப்பு ரயில்களை நாளை வரை இயக்குகிறது.

<<<<>>>>

தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி மக்களவையில் நாளை சிறப்பு விவாதம் நடைபெற உள்ளது.

இதைத் தெரிவித்த நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, பிரதமர் திரு. நரேந்திர மோடி விவாதத்தை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளதாகத் தெரிவித்தார்.

நண்பகல் 12 மணி முதல் இந்த விவாதம் நடைபெறும்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வந்தே மாதரம் தேசியப் பாடல் தொடர்பான விவாதத்தை நாளை 8ஆம் தேதியும், தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதத்தை வரும் செய்வாய்க்கிழமையும் நடத்த முடிவு செய்யப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள அரசுக் கல்லூரிகளில் பணியாற்றி வரும் தினக்கூலி ஊழியர்களுக்கான 9 மாத நிலுவை ஊதியத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 10 ஆண்டுகளுக்கு மேல் தினக்கூலியாக பணியாற்றுவோரை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

ஏழை எளிய மற்றும் நடுத்தர குடும்பங்களின் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் பிரதமரின் வீட்டு வசதித் திட்டம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் ஏழை எளிய நடுத்தர மக்கள் பாதுகாப்பான கான்கிரீட் வீடுகளைப் பெற்றிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Suresh - 35 Sec)**

<<<<>>>>

பஞ்சாப் எல்லைப் பகுதியில் நாட்டிற்குள் ஊடுருவ முயன்ற மூன்று ட்ரோன்கள் பிடிபட்டதாக எல்லைப் பாதுகாப்புப் படையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற மற்றொரு தேடுதல் வேட்டையின்போது ஒரு கிலோவுக்கும் கூடுதலான ஹெராயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நேபாளத்தில் 5 லட்ச ரூபாய்க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளை வங்கிகள் மூலமாகவே மேற்கொள்ள வேண்டும் என்று அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தெரிவித்த அரசின் செய்தித்தொடர்பாளரும், அமைச்சருமான திரு. ஜக்தீஷ் காரெல், சட்டவிரோத பணப்புழக்கத்தை தடுப்பதற்காகவும், வெளிப்படையான பணப் பரிவர்த்தனைகளை உறுதி செய்யவும் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரில் இந்திய - தென்னாப்பரிக்க அணிகளுக்கு இடையிலான ஹாக்கிப் போட்டிகள் இன்று தொடங்குகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி இன்றிரவு மணி 8.30க்கு தொடங்குகிறது.

எஞ்சிய 2 போட்டிகள் வரும் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் நடைபெற உள்ளது.

**<<<<The End>>>>**